Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
சுதி : 153

வெள்ளிக்கிழமை 28 ஏப்ரல் 2023

சித்திரை 15 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் சிலைகள் இன்று மீள்பிரதிஷ்டை

## தொல்லியல் திணைக்களம் மேற்பார்வை மாத்திரமே செய்யலாம்


## பொலிஸார் கைப்பற்றிய சிலைகளை மீள ஒப்படைக்கவேண்டும்

### வவுனியா நீதிமன்றம் அதிரடி உத்தரவு

வவுனியா, ஏப். 28
நெடுங்கேணி பொலிஸார் எடுத்துச் சென்ற தெய்வ விக்கிரகங்களை ஆலய நிர்வாகத்தினரிடம் மீள ஒப்படைக்கவேண்டுமென்றும் அவற்றை வெடுக்குநாறிமலையில் மீளவும் பிரதிஷ்டை செய்யமுடியும் எனவும் வவுனியா நீதிவான் நீதிமன்ற நீதிவான் தேவராசா சுபாஜினி கட்டளையிட்டுள்ளார். வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் வழிபாடுகளைத் தடுப்பதற்கு »11

### தையிட்டியில் பௌத்த ஆக்கிரமிப்பு

# திஸ்ஸ விகாரைக்காக 100 அடி உயரமான தூபி!



யாழ்ப்பாணம், ஏப்ரல் 28

யாழ்ப்பாணம் - தையிட்டியில் தனியார் காணிகளை ஆக்கிரமித்து சர்ச்சைக்குரிய வகையில் அமைக்கப்பட்டுள்ள தையிட்டி திஸ்ஸ விகாரைக்கென 100 அடி உயரத்தில் தூபியொன்று அமைக்கப்பட்டுள்ளது. »11

### மனித உரிமைகள் மீறல்

## வசந்த கரன்னகொடவுக்கு அமெரிக்கா பயணத்தடை

கொழும்பு, ஏப். 28
மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் கடற்படைத் தளபதியும் வடமேல் மாகாண ஆளுநருமான வசந்த கரன்னகொடவுக்கு அமெரிக்கா பயணத்தடை விதித்துள்ளது. அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது. »11

## ஊழல் எதிர்ப்புச் சட்டம் நாடாளுமன்றத்தில்!

கொழும்பு, ஏப். 28
ஊழல் எதிர்ப்புச் சட்டவரைவு, நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.
நாடாளுமன்றம் நேற்று காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. »11

## கரன்னகொடவுக்குத் தடை; அலி சப்ரி கடும் அதிருப்தி

கொழும்பு, ஏப். 28
மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொடவுக்கு அமெரிக்கா பயணத் தடை விதித்துள்ள நிலையில், இதற்கு »11

## மாடுகளைக் கடத்த வந்தோரை மடக்கிப்பிடித்த இளைஞர்கள்!

### மாங்குளத்தில் சம்பவம்

முல்லைத்தீவு, ஏப். 28
முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மாங்குளம் பகுதியில் தொடர்ச்சியாக மாடுகள் திருடப்படும் நிலையில், அவ்வாறு மாடு கடத்த வந்தவர்களை அந்தப் »11

### நெடுந்தீவுப் படுகொலைகள்;

## 100 வயதான மூதாட்டியும் சிகிச்சை பயனின்றிப் பலி!

யாழ்ப்பாணம், ஏப். 28
நெடுந்தீவில் நகைகளை அபகரிக்கும் நோக்குடன் கொடூரமாக நடத்தப்பட்ட தாக்குதலில் படுகாயமடைந்த 6 ஆவது »11

### முல்லைக் கடலில்

## சட்டவிரோத மீன்பிடி 9 மீனவர்கள் கைது!

முல்லைத்தீவு, ஏப். 28
முல்லைத்தீவு, நாயாறு கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் சுருக்குவலை மற்றும் ஒளிபாய்ச்சி மீன்பிடியில் ஈடுபட்ட 9 மீனவர்கள் கைது »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45 நாள்களில் விற்பனையில் இறங்கும் சினோபெக் நிறுவனம்

**கொழும்பு, ஏப். 28**

**இலங்கையில் சில்லறை எரிபொருள் விற்பனைக்கான ஒப்பந்தங்களை மேற்கொள்ளவும் நடவடிக்கைகளை ஆரம்பிக்கவும் சினோபெக் நிறுவன அதிகாரிகள் குழுவொன்று இலங்கை வந்துள்ளது. இந்தக் குழுவில் தொழில் நுட்ப நிபுணர்கள் அடங்கிய குழுவும் உள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர ருவிற்றர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

குழுவுக்கும் அமைச்சருக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் அமைச்சில் இடம்பெற்றது. அங்கு ஒப்பந்தம் தொடர்பான அட்டவணைகள், ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் அது தொடர்பான பிற விடயங்கள் குறித்து விவாதம் நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை- எதிர்வரும் மே மாதம் இது தொடர்பான ஒப்பந்தங்களில் கைச்சாத்திடவும் 45 நாள்களுக்குள் நடவடிக்கைகளை ஆரம்பிக்கவும் இணக்கம் காணப்பட்டதாக அமைச்சர் தனது ருவிற்றரில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஒ-இ)

## ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் அங்கத்தவர் சந்தாப்பணம் உயர்வு!

யாழ்ப்பாணம், ஏப். 28

பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய அங்கத்தவர்களின் சந்தாப்பணம் 100 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று யாழ்.மாவட்ட பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் யாழ்.மாவட்ட பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் செயலாளர் கணேசலிங்கம் அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

கடந்த 21 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற தாய்ச் சங்க பொதுக்கூட்டத்தில் அங்கத்தவர்களின் மாதாந்த சந்தாப்பணத்தை 100 ரூபாவாக அதிகரித்தும், மானியங்களையும் அதிகரித்து வழங்குவது எனவும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி 100 ரூபா செலுத்தும் அங்கத்தவர்களுக்கு ஆறு மாதங்களின் பின்னர் 100 ரூபா அதிகரித்து மானியம் வழங்கப்படும். ஏற்கனவே அங்கத்துவப் பணத்தை 100 ரூபாவாக அதிகரிக்கவேண்டும் என வருடாந்த பொதுக்கூட்டங்களில் தீர்மானம் எடுத்த பிரிவு சங்க அங்கத்தவர்களுக்கும் ஏனைய பிரிவுச் சங்கங்களில் இருந்து மேற்படி அதிகரிப்புக்கு சம்மதம் தெரிவித்து விருப்புக் கடிதங்களை வழங்கும் ஓய்வூதியர்களுக்கும் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இது தொடர்பில் மேலதிக தகவல்களைப் பெறுவதற்கு தங்களது பிரிவுச் சங்கங்களின் செயலாளர்களைத் தொடர்புகொள்ளுங்கள் - என்றுள்ளது. (ஒ-14)



## தந்தை செல்வா நினைவுத்தூபி தெல்லிப்பழையில் திரைநீக்கம்

யாழ்ப்பாணம், ஏப். 28

ஈழத்துக் காந்தி என அழைக்கப்படும் தந்தை செல்வாவின் 46ஆவது நினைவு தின நிகழ்வும் நினைவுத் தூபி திரைநீக்கமும் நேற்றுமுன்தினம் புதன்கிழமை தெல்லிப்பழை சேமக்காலையில் இடம்பெற்றன.

செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் ஏற்பாட்டில் அறங்காவல் குழுத் தலைவர் ஓய்வுநிலைப் பேராயர் கலாநிதி.சு.ஜெபநேசன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

அஸ்தியுடன் கூடிய தந்தை செல்வாவின் நினைவுத் தூபியை அறங்காவல் குழுத்தலைவர் ஜெபநேசன் திரைநீக்கம் செய்தார்.

தொடர்ந்து தூபிக்கு நினைவுச் சுடர் ஏற்றப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. (ச-66)

## "வடந்தை" நூலுக்கு ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஏப். 28

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சால் வருடாவருடம் வெளியிடப்படும் வடமாகாண பண்பாட்டு அம்சங்களை உள்ளடக்கிய "வடந்தை" நூலுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

நூலில் உள்ளடக்கப்படுவதற்கான தரமான ஆக்கங்கள் எழுத்தாளர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. ஆக்கங்கள் யாவும் "உளரீதியான ஆற்றுப்படுத்தலில் கலைகளின் பங்கு", "வட மாகாண கலைகள் சர்வதேசம் நோக்கிப் பயணிப்பதற்கான ஏது நிலைகள்", "தமிழ்ப் பண்பாட்டில் மரபு வழிக்கல்வியின் வகிபாகம்", "தமிழர் வாழ்வில் கூட்டுக் குடும்பத்தினதும் தனிக்குடும்பத்தினதும் வகிபாகம்", "தமிழர் பாரம்பரியமும் உணவுப் பழக்கவழக்கங்களும்", "பொருளாதார மேம்பாட்டில் கலைகளின் பங்கும்" ஆகிய தலைப்புக்களில் அமையவேண்டும்.

அத்துடன் ஆக்கங்கள் அனைத்தும் வடக்கு மாகாணம் சார்ந்ததாக இருத்தல்வேண்டும். அரசியல் கலப்பற்றதாக இருத்தல் அவசியம், தனிப்பட்ட நபரை பாதிக்காது கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருத்தல்வேண்டும். ஒருவர் ஒரு கட்டுரை மட்டுமே சமர்ப்பிக்கமுடியும். ஆக்கமானது அவரவர் சொந்த ஆக்கமாக இருப்பதை உறுதிப்படுத்தல்வேண்டும். முன்னர் எந்தப் பத்திரிகைகளிலோ சஞ்சிகைகளிலோ பிரசுரிக்கப்படாத ஆக்கங்களாக இருத்தல்வேண்டும். கணினியில் 12 என்ற எழுத்தளவில் தட்டச்சு செய்யப்பட்ட மென்பிரதிகளை கீழே தரப்படும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைப்பதுடன் அதன் வன் பிரதியை அலுவலக முகவரிக்கு தபால் மூலமாகவோ நேரடியாகவோ சமர்ப்பிக்கவும். ஏ-4 தாளில் 4 பக்கங்களுக்கு மேற்படாமல் இருத்தல்வேண்டும். கையெழுத்துப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் ஆக்கங்கள் நிராகரிக்கப்படும் ஆகிய விதிமுறைகளை எழுத்தாளர்கள் பின்பற்றவேண்டும்.

ஆக்கங்களை பிரதிப் பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கல்வி அமைச்சு செம்மணி வீதி நல்லூர் எனும் முகவரிக்கு அல்லது npc.culture@yohoo.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எதிர்வரும் மே மாதம் 26ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14)

## விடைத்தாள் திருத்தும் பணி களமிறங்குவதற்குத் தயார்!

*மருத்துவர்கள் தெரிவிப்பு*

கொழும்பு, ஏப். 28

அரசாங்கம் கோரிக்கை விடுத்தால் க.பொ.த. உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணியை மேற்கொள்ள மருத்துவர்கள் தயாராகவுள்ளனர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கொழும்பு தேசிய மருத்துவமனை மருத்துவர் ருக்ஷான் இந்த விடயத்தைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்;

அரசாங்கத்தின் புதிய வரிக்கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கங்களின் சம்மேளனம் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. நாட்டு நலனில் அக்கறையின்றி செயற்படுவதால் பாதிக்கப்படுவது மாணவர்களின் எதிர்காலமே. அவர்கள் பரீட்சைக்குத் தோற்றி பல மாதங்களாகிவிட்டன.

ஆனால், அவர்களது விடைத்தாள்களைத் திருத்தும் பணிகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. இழுபறியில் முடிவின்றித் தொடர்ந்து கொண்டே செல்கின்றது. மாணவர்களின் எதிர்காலம் பரீட்சைப் பெறுபேறுகளிலேயே தங்கியுள்ளது. அரசாங்கம் கோரிக்கை விடுத்தால் க.பொ.த.உயர்தரப்பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணியை மேற்கொள்ள மருத்துவர்கள் தயாராகவுள்ளனர். (ச-6)

### வடக்கு மாகாண

## அதிபர் வெற்றிடங்களை நிரப்ப நேர்முகத் தேர்வு!

யாழ்ப்பாணம், ஏப். 28

வடக்கு மாகாண பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடங்களுக்கு தகைமையுள்ள அதிபர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகத் தேர்வுகளை நடத்த அந்தந்தக் கல்வி வலயங்கள் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

கடந்த டிசெம்பருடன் 60 வயது பூர்த்தியான அனைவரும் ஓய்வுபெற்றனர். இதனால் பல பாடசாலைகளில் அதிபர் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன.

பாடசாலை III மற்றும் II வகை பாடசாலைகளுக்கு அந்தந்தக் கல்வி வலயங்களும் வகை Iசீ மற்றும் I ஏபி பாடசாலைகளுக்கு அந்தந்த மாகாணக் கல்வித் திணைக்களமும் கடந்த ஜனவரி மாதம் விண்ணப்பங்கள் கோரியிருந்தன. உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டதையடுத்து நேர்முகத் தேர்வு இடைநிறுத்தப்பட்டது.

தற்போது வடக்கு மாகாண பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடங்களுக்கு தகைமையுள்ள அதிபர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகத் தேர்வு நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி கல்வி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ள பாடசாலை வகை III ஐச் சேர்ந்த சரசாலை ஸ்ரீகணேச வித்தியாலயம், கோவிலாக் கண்டி மகாலட்சுமி வித்தியாலயம், சாவகச்சேரி சக்தி அம்மன் வித்தியாலயம், சாவகச்சேரி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை வகை IIஐச் சேர்ந்த மட்டுவில் கமலாசனி. வித்தியாலயம், மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம், மிருசுவில் அ.த.க. பாடசாலை ஆகியவற்றுக்கான அதிபர்களைத் தேர்வு செய்வதற்கான நேர்முகத்தேர்வு எதிர்வரும் மே 12 ஆம் திகதி வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (ச-9)

## கசிப்புடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 28

பாலாவிப் பகுதியில் கசிப்புடன் ஒருவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டார் என்று கொடிகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உதயனுக்கு தெரிவித்தார்.

20 போத்தல் கசிப்புடன் 40 வயதான ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அதனையடுத்து அவரை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ஒ-14-125)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் அடிப்படை உரிமையை மீறும்

## சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஏப். 28**

**பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவின் சில சரத்துகளால், அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாக, அதை மீளாய்வு செய்ய நியமிக்கப்பட்ட குழு பரிந்துரை செய்துள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர், செயலரின் கையொப்பங்களுடன் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில் வெளியிடப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவை மீளாய்வு செய்வதற்காக விசேட குழுவொன்றை நியமித்ததாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கூறியுள்ளது.

சட்டவரைவின் சில சரத்துகள் நீதியை நிலைநாட்டும் முறைமையை மீறும் வகையில் அமைந்துள்ளதாகவும் அது அடிப்படை உரிமைகளுக்கு முரணானது எனவும் குறித்த குழு கூறியுள்ளதாக சட்டத்தரணிகள் சங்கத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-இ)

# உரிமைமீறல் வழக்குகள் மக்கள் கருத்துக் கேட்டறிக

## *நீதிமன்று உத்தரவு*

கொழும்பு, ஏப். 28

அடிப்படை மனித உரிமை மீறல்கள் தொடர்பாகத் தாக்கல் செய்யப்படும் வழக்குகளின்போது பொது மக்களினதும் சிவில் சமூகக் குழுக்களினதும் அபிப்பிராயங்களைக் கேட்டறியவேண்டும் என உயர்நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. பொலிஸாரும் சட்டத்தரணிகளும் இணைந்து இந்தச் செயற்பாட்டை முன்னெடுக்கவேண்டும்.

பொதுமக்களிடமிருந்தும் சிவில் சமூகக் குழுக்களிடமிருந்தும் அபிப்பிராயங்கள் வரவேற்கப்பட வேண்டும்.

அதற்கமைய அபிப்பிராயங்கள் மற்றும் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புவோர் பொலிஸ் சட்டப்பிரிவு 234 வக்சால் வீதி, கொழும்பு 02 என்ற முகவரிக்கோ அல்லது legaldivision4@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அபிப்பிராயங்களை அனுப்பலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-6)

# மே மாதத்தில் சூடு தணியும்

கொழும்பு, ஏப். 28

மே மாதம் 20 ஆம் திகதிக்குப் பின்னர் வெப்பமான காலநிலை குறைவடையக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதுதொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவிக்கையில்;

ஆரம்பத்தில் காணப்பட்ட வெப்பநிலை தற்போது சிறியளவில் குறைவடைந்துள்ளது.


நாட்டில் தற்போது மழை கிடைக்கப்பெறும் நிலையில், வெப்பம் குறைவடைவதற்கான சாத்தியங்கள் தென்படுகின்றன. எனினும், இன்னும் வெப்பநிலை நீங்கவில்லை.

மழைவீழ்ச்சி தொடர்ந்தும் அதிகரிக்குமானால் வெப்பநிலை அடுத்த மாதம் 20 ஆம் திகதிக்குப் பின்னர் குறைவடையும் - என்றார். (ச-இ)

# வெடுக்குநாறி லிங்கேஸ்வரர் பூசை வழிபாடுகள் ஆரம்பம்

வவுனியா, ஏப். 28

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நீண்ட காலத்துக்குப் பிறகு பூசை வழிபாடுகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.



வவுனியா வடக்கு ஒலுமடு கிராம அலுவலர் பிரிவில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆதிலிங்கேஸ்வரர் ஆலய வழிபாட்டுக்கு தொல்பொருள் திணைக்களத்தினர் மற்றும் பொலிஸார் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தநிலையில் பூசைகள் இடைநிறுத்தப்பட்டன.

அண்மையில் ஆலயத்தில் அமைக்கப்பட்டிருந்த ஆதிலிங்கேஸ்வரர் உள்ளிட்ட விக்கிரகங்கள் இனந்தெரியாத விஷமிகளால் உடைத்தெறியப்பட்டன.

இந்த வழக்கு வவுனியா நீதிவான் நீதிமன்றில் கடந்த 24ஆம் திகதி முன்னெடுக்கப்பட்டு ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் ஆலயம் சார்பில் முன்னிலையாகியிருந்தார்.

இதன்போது மத வழிபாடு என்பது எவராலும் மட்டுப்படுத்தமுடியாத உரிமைகள். வெடுக்குநாறிமலை விவகாரத்தில் வழிபாடுகளை நடத்துவதற்கும், வணக்கங்களைச் செலுத்துவதற்கும் பக்தர்கள் செல்வதை எந்த அதிகாரிகளும் தடுக்கமுடியாது என தீர்ப்பளிக்கப்பட்டது. நீதிமன்ற உத்தரவுக்கமைய நேற்றைய தினம் வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரருக்கு பூஜை வழிபாடுகள் சிறப்புற இடம்பெற்றன. (ச)





**பள்ளிக்கூடங்களில இப்ப புது வகுப்புகள் தொடங்கிட்டுது. புது வகுப்புக்குப் போனால் புதுப் பாடப்புத்தகங்கள் குடுக்கவேணும். வழக்கமா கொஞ்சம் பார்த்துப்பாராமல் நாலைஞ்சு புத்தகங்கள் கூடுதலாத்தான் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவினம். ஆனால் இந்தமுறை பொருளாதார நெருக்கடியைக் காரணம் காட்டி, அளவாத்தான் அனுப்புப்பட்டிருக்கு. இதால சில பிள்ளையளுக்கு சில புத்தகங்கள் குடுபடேலை. எத்தனை பிள்ளையள் எண்டு கணக்குப் பார்த்து அனுப்பேக்க எப்பிடி ஒண்டிரண்டு பிள்ளையளுக்கு புத்தகம் கிடைக்காமல் போயிருக்கும்? பள்ளிக்கூடங்களில செல்வாக்குள்ள ரீச்சர்மார், பிரின்சிபல் எண்டு ஆளுக்காள் தங்களுக்குத் தெரிஞ்ச, வேற பள்ளிக்கூடங்களில படிக்கிற பிள்ளையளுக்கு, தங்கட பள்ளிக்கூடத்துக்கு வந்த புத்தகங்கள் சிலதை 'ஆட்டையைப்போட்டு' கொண்டுபோய் குடுத்திருக்கினம்.**

**சரி, ஏதோ படிப்புக்காக இப்பிடிச் செய்தவை எண்டு அதைக்கூட விட்டிடலாம். ஆனால் புத்தகம் குடுக்காமல் விட்டிட்டு அதுக்குப் பிள்ளையளுக்கு தண்டனை குடுக்கிறதை எப்பிடி ஏற்றுக்கொள்ளலாம். வவுனியாவில உள்ள 'பேமஸான' பள்ளிக்கூடத்தில இப்பிடி ஒரு வகுப்பில எட்டுப் பிள்ளையளுக்கு ஒரு பாடத்துக்கான புத்தகம் குடுபடேலை. அந்தப் பாடத்தைப் படிப்பிக்கிற ரீச்சர் கிளாஸ் எடுக்க வந்திருக்கிறா. வந்தவா பாடத்தைப் படிப்பிச்சுப் போட்டு, மளமளவெண்டு புத்தகத்தில உள்ள கேள்வியளுக்கு விடை எழுதச் சொல்லியிருக்கிறா. எல்லாரும் எழுதிக்காட்ட, புத்தகம் இல்லாத எட்டுப் பிள்ளையளும் ஆளையாள் பாத்து முழுசிக் கொண்டிருந்திருக்கினம். அவை கேள்விக்கு விடை எழுதேலை எண்டு ரீச்சரும் ஆசைதீர விளாசித்தள்ளிப்போட்டா.**

**வீட்டை வீங்கின விரலோட பிள்ளையள் வந்ததைப் பார்த்து பெற்றோர் பதறிப்போய் 'என்ன நடந்தது?' எண்டு கேக்க, பிள்ளையளும் நடந்ததைச் சொல்லியிருக்குதுகள். அடுத்தநாள் பெற்றோர் போய் 'பாடப்புத்தகத்தைக் குடுக்காமல் கேள்விக்கு விடை எழுதேலை எண்டு எப்பிடி அடிக்கலாம்? ஏன் புத்தகம் குடுக்கேலை?' எண்டெல்லாம் நியாயம் கேட்டிருக்கினம். ஆனால் அப்பிடி நியாயம் கேட்ட பெற்றோரை அந்தப் பள்ளிக்கூடத்தில இருந்த மாஸ்ரர் ஒருத்தர் கண்டபடி பேசி அனுப்பிட்டாராம். ஆனால் பெற்றோரும் விடேலை. பொலிஸில முறைப்பாடு குடுத்ததோட, கவர்னருக்கும் இதைத் தெரியப்படுத்தி இருக்கினம். பொலிஸ் பல்ளிக்கூடம் போய் விசாரிக்க, பாதிக்கப்பட்ட எட்டுப் பிள்ளையளும் தங்களுக்கு புத்தகம் தராமல், ரீச்சர் அடிச்ச கதையை சொல்லியிருக்குதுகள். பொலிஸ் பிரின்சிபலையும், ரீச்சரையும் எச்சரிக்கை செய்துபோட்டு போயிருக்கினம்.**

**இப்ப முறைப்பாடு செய்த பிள்ளையளோட ஆரும் கதைக்கக்கூடாது எண்டு பள்ளிக்கூட நிர்வாகம் மற்றப்பிள்ளையளுக்கு கண்டிப்பான ஓர்டர் போட்டிருக்காம். இப்பிடிப்பட்ட பள்ளிக்கூடக்காரர் எப்பிடி பிள்ளையளுக்கு வழிகாட்டப்போகினம்?**



**- பட்சி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்படுகொலையாளரை உடன் தடைசெய்யுங்கள்

## ஆஸி. அரசாங்கத்திடம் கோரிக்கை

கொழும்பு, ஏப். 28
இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக இன அழிப் புக் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் மற்றும் ஈடுபடு கின்றவர்களுக்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் தடை விதிக்க வேண்டும் என்று தமிழ் ஏதிலிகள் பேரவை வலியுறுத்தியுள்ளது.
வசந்த கரன்னகொடவுக்கு எதிராக அமெரிக்க அரசாங்கம் தடைவிதித்துள்ளமையை மேற் கோள் காட்டியுள்ள தமிழ் ஏதிலிகள் பேரவை, இது தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக் கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-
எங்கள் சகோதர, சகோதரிகளை கொலை செய்த பலர் தொடர்ந்தும் எங்கள் தாயகத்தின் மக்கள் மீது இனப்படுகொலை அதிகாரத்தை பேணுவதற்காக அதிகாரத்தில் வைக்கப்பட்டுள் ளமைக்கு வசந்த கரன்னகொட ஓர் உதாரணம். தமிழீழத்தில் பலவந்தமாக காணாமல்போதல் இன்றளவும் தொடர்ந்து வருகின்றது. ஈதலால், ஈழத்தமிழர்களுக்கு எதிராக இலங்கையில் இன அழிப்பு குற்றங்களில் ஈடுபட்டவர்கள் தொடர்ந் தும் ஈடுபட்டுக்கொண்டிருப்பவர்களுக்கு எதிராக அவுஸ்திரேலிய அரசாங்கம் தடைகளை விதிக்க வேண்டும்.
2009ஆம் ஆண்டில் இடம்பெற்ற இனப்படு கொலைகளுக்கு இலங்கை அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் தொடர்பில் அவுஸ்திரேலிய அரசாங்கம் தெளிவான ஒரு கொள்கையைக் கொண்டிருக்கவேண்டும். இனப்படுகொலை யாளர்களான இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதை அவுஸ்திரேலிய அரசாங்கம் கைவிடவேண்டும் - என்றுள் ளது. (ம)

# பிரதி சனிக்கிழமைகளில் கண்புரை பரிசோதனைகள்

சாவகச்சேரி, ஏப். 28
தென்மராட்சிப் பிரதேசத்தில் கண் பார்வையில் குறைபாடு காணப்படும் 50 வயதுக்கு மேற்பட்டோருக்கான இலவச கண் புரை பரிசோதனைகள், நாளை சனிக்கிழமை முதல் பிரதி சனிக்கிழமைகளில் பிரதேசத்தில் உள்ள மருத்துவமனைகளில் யாழ்.போதனா மருத்துவமனை கண் சிகிச்சைப் பிரிவினரால் நடத்தப்படவுள்ளன.
நாளை சனிக்கிழமை தென்மராட்சி கிழக்குப் பிரதேச மக்க ளுக்கான கண்புரை பரிசோதனைகள் கொடிகாமம் பிரதேச மருத்துவமனையிலும், மே 13 ஆம் திகதி வரணி மருத்துவ மனையிலும், மே 20 ஆம் திகதி கைதடி மருத்துவமனை யிலும் 27ஆம் திகதி மற்றும் ஜூன் மாதம் 10 ஆம் திகதி ஆகிய தினங்களில் சாவகச்சேரி மருத்துவமனையிலும் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை நடத்தப்படவுள் ளன. அத்துடன் கண்புரை பரிசோதனையில் விழிவெண் படலத்தில் பூ பட்ரிக் ஏற்பட்டிருப்போருக்கு இலவசமாக சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட் டுள்ளது. (ஒ-14,9)

# தமிழர் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும்!

## அது அரசின் கடமை பிரதமர் வலியுறுத்து

கொழும்பு, ஏப். 28
நாட்டின் அபிவிருத்திக்குத் தமிழர்கள் பங்க ளிப்பு வழங்குவதுபோல் அவர்கள் எதிர்பார்க் கும் அரசியல் பிரச்சினைக்கும் விரைந்து தீர்வு வழங்குவது அரசின் கடமை என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
'இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள புலம்பெயர் தமிழர்கள் சிலர் முன்வந்துள்ளார் கள். அவர்களை வரவேற்கின்றோம். இந்தச் சிலர் என்ற எண்ணிக்கை பலராக நூற்றுக்கணக் காக ஆயிரக்கணக்காக பல்லாயிரக்கணக்காக மாறவேண்டும் என்பதே எமது விருப்பம். உள் நாட்டில் வாழும் தமிழர்களும் நாட்டின் அபிவி ருத்திக்குக் கூடுதலான பங்களிப்பை வழங்க வேண்டும். அப்போதுதான் வீழ்ந்த எமது நாட்டை விரைவில் மீளக்கட்டியெழுப்பமுடியும். நாட்டின் அபிவிருத்திக்குத் தமிழர்கள் பங்க ளிப்பு வழங்குவதுபோல் அவர்கள் எதிர்பார்க் கும் அரசியல் பிரச்சினைக்கும் விரைந்து தீர்வு வழங்குவது அரசின் கடமை' - என்றார். (அ-ம-22)

## குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஏப். 28
மதியழகன் லக்ஸனின் 31 ஆம் நாள் நினைவு தினத்தை முன்னிட்டு குருதிக்கொடை முகாம், நாளைமறுதினம் ஞாயிற் றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை சுன்னாகம் திரு ஞானசம்பந்தர் வித்தியா சாலையில் நடைபெறவுள் ளது. (ஒ-14,66)

## ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம், ஏப். 28
ஸ்ரீலஸ்ரீ மௌனகுரு சுவாமி களின் 118 ஆவது ஜெயந்தி விழா, இன்று வெள்ளிக்கி ழமை காலை 9 மணிக்கு தொண்டைமானாறு செல் வச்சந்நிதி ஆலயத்தில் நடை பெறவுள்ளது. சந்நிதியான் ஆச்சிரமத்தில் அன்ன தானமும் இடம்பெறும் என்று விழா ஏற்பாட்டாளர்கள் அறி வித்துள்ளனர். (ஒ-14)

## சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், ஏப். 28
மனிதர் 88 அமைப்பால் தென்மராட்சி மந்துவில் பாரதி வித்தியாலய மாண வர்களுக்கு நடத்திய தலைமைத்துவப் பயிற்சி நெறியின் நிறைவும் சான் றிதழ் வழங்கலும், இன்று வெள்ளிக்கிழமை வித் தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பயிற்சி நெறியின் வளவாளராக யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையா ளர் சு.கபிலன் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினார். (ஒ-14,9)

## உயர்தர மாணவருக்கு கல்வி ஊக்குவிப்பு நிதி

சாவகச்சேரி, ஏப். 28
தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் வறுமையுள் திறமை என்னும் நிதியத்தின் மூலம் சங்க எல்லைக்குட்பட்ட க.பொ.த. உயர்தரப் பிரிவில் கற்கும் மாண வர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு நிதி, சங்கத் தலைமையக மண்டபத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
சங்கத் தலைவர் இ.அ.ஆனந்தராசா தலைமையில் நடைபெறவுள்ள நிதி வழங்கல் நிகழ்வில், முதன்மை விருந் தினராக வடமாகாண கூட்டுறவு அபிவி ருத்தி ஆணையாளர் தேவந்தினி பாபு கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-14,9)

## நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி

சாவகச்சேரி, ஏப். 28
தென்மராட்சிப் பிரதேசத்தில் வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதி தொடக்கம் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்படவுள்ளது. தடுப்பு மருந்து ஏற்றும் பணிகள், எழுதுமட்டுவாழ் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக பணியக பிரிவுக்குட் பட்ட ஏனைய பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுகளிலும் மேற்கொள்ளப் படவுள்ளன. தமது பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகருடன் தொடர்பு கொண்டு வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்து ஏற்றிக்கொள்ளுமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (ஒ-14,9)

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** முயற்சியில் வெற்றி கிடைக் கும் நாள். உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள். ஏட்டிக்குப் போட் டியாகச் செயற்பட்டவர்கள் இனி வில குவர்.

**இடபம்:** பிரச்சினைகளிலிருந்து விடு படும் நாள். பிள்ளைகள் வழியில் நல்ல செய்தி வந்து சேரும். தொழில் தொடங் குவதற்கான திட்டங்களைத் தீட்டு வீர்கள்.

**மிதுனம்:** கொடுத்த தொகை குறிப் பிட்டபடி வந்து சேரும் நாள். குடும்பச்சுமை கூடும். உத்தியோகத்தில் உங்கள் கருத்துகளை மேலதிகாரிகள் ஏற்றுக் கொள்வர்.

**கடகம்:** தொடரும் வெற்றிகளால் துணிவு கூடும் நாள். தொகை கேட்ட இடத்தில் கிடைக்கும். உடன்பிறப்புகள் வழியில் உள்ளம் மகிழும் செய்தி யொன்று வந்து சேரும். மனக்குழப்பம் அகலும்.

**சிம்மம்:** இல்லத்தில் இனிய சம்பவம் நடைபெறும் நாள். பகல் இரவாகப் பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்கும். தொழில் ரீதியாக எடுத்த முயற்சி வெற்றி பெறும்.

**கன்னி:** அருகில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள். விடாமுயற்சியோடு செயற்படுவது நல்லது. நேற்று செய்யாமல் விட்ட வேலையொன்றால் அவதிப்பட நேரிடும்.

**துலாம்:** தடைகள் அகலும் நாள். தாராளமாகச் செலவிட்டு மகிழ்வீர் கள். புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். பேச்சில் இனிமை கூடும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.

**விருச்சிகம்:** வருமானம் திருப்தி தரும் நாள். எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும்.

**தனுசு:** எதிரிகள் விலகும் நாள். எதிர்பார்த்தபடியே நல்ல காரியங் கள் நடைபெறும். தொழில் ரீதியாக புதிய ஒப்பந்தங்களில் கையெழுத் திட்டு மகிழ்வீர்கள்.

**மகரம்:** எதிரிகள் விலகும் நாள். எதிர்பார்த்தபடியே நல்ல காரி யங் கள் நடைபெறும். தொழில் ரீதி யாக புதிய ஒப்பந்தங்களில் கையெழுத் திட்டு மகிழ்வீர்கள்.

**கும்பம்:** நெருக்கடி நிலையைச் சமா ளிக்க நிதியுதவி கேட்கும் நாள். நிகழ்காலத் தேவைகள் கடைசி நேரத்தில் கைகூடும். புதிய நண்பர்க ளின் அறிமுகம் கிடைக்கும்.

**மீனம்:** நம்பிக்கைகள் நடைபெறும் நாள். உறவினர்கள் கேட்ட உதவிக ளைச் செய்வர். உத்தியோகத்தில் சக பணியாளர்கள் உங்கள் வேலை யைப் பகிர்ந்து கொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# அடிமேல் அடியடித்தால்...!

கடந்த செவ்வாய்க்கிழமை பொதுமுடக்கப் போராட்டமொன்று தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்பட்டது. இந்தப் பொதுமுடக்கம் தொடர்பில் பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. 'இப்போதைய சூழலில் பொதுமுடக்கம் தேவையற்றது. பொதுமுடக்கத்தால் எதுவும் நடக்கப்போவதில்லை. அரச இயந்திரத்தைப் பாதிக்காத பொதுமுடக்கத்தால் தமிழ் மக்களின் கோரிக்கைகள் நிறைவேறாது.' இவ்வாறு பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. அதிலும் பொதுமுடக்கத்துக்கு ஆதரவு வழங்காத தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவாளர்களும், அரசாங்கத் தரப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கட்சியினரும் இதில் முக்கியமாக எதிர்வினையாற்றியவர்கள். பொதுமுடக்கத்தால் மாத்திரம் எதுவும் நடந்துவிடப்போவதில்லை. ஆனால், அதை ஒரு பெரும் போராட்டமாக – தொடர் போராட்டமாக மாற்ற வேண்டும் என்பதை நாமும் தொடர்ந்து வலியுறுத்திவருகின்றோம். ஆனாலும் நடைபெற்று முடிந்த பொதுமுடக்கம் அரசாங்கத்துக்கும் அதன் நிறுவனங்களுக்கும் நிச்சயம் அழுத்தத்தை வழங்கும். அத்தகையதொரு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு விடக்கூடாது என்பதால்தான் அரசு தனது அடிவருடிகள் ஊடாக பொதுமுடக்கத்தைக் குழப்புவதற்கு முயற்சித்தது.

நாடாளுமன்றத்தில் கடந்த 25ஆம் திகதி பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் முன்வைக்கப்படவிருந்தது. இதைக் கைவிட வேண்டும் என்பதும் பொதுமுடக்கத்தின் கோரிக்கைகளில் ஒன்றாக இருந்தது. அதேசமயம் தெற்கிலும், சர்வதேச சமூகத்தின் மத்தியிலிருந்தும் இதைக் கைவிடவேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. பெரும் அழுத்தம் இந்தச் சட்டவரைவுக்கு எதிராக எழுந்ததைத் தொடர்ந்து ரணில் அரசு பின்வாங்கத் தொடங்கியது. 25ஆம் திகதி முன்வைக்கப்படவிருந்த சட்டவரைவு எப்போது முன்வைக்கப்படும் என்பது தெரியாத நிலைக்கு வந்திருக்கின்றது. அழுத்தங்கள் ஊடாகவே அரசாங்கம் அடிபணிந்தது. பொதுமுடக்கமும் அழுத்தத்தைப் பிரயோகிக்கும் ஒருவழி என்பதாலேயே தமிழ்க் கட்சிகள் அதைக் கையில் எடுத்திருந்தன.

தமிழ்க் கட்சிகள் அழைப்புவிடுத்த பொதுமுடக்கத்துக்கான அத்திபாரமாக வெடுக்குநாறி ஆலய இடித்தழிப்பு விவகாரமே அமைந்தது. அதேகாலப் பகுதியில் தமிழர் தாயகத்தில் குருந்தூர்மலை, கன்னியாய் வெந்நீர் ஊற்று, நெடுந்தீவு வெடியரசன் கோட்டை, கச்சதீவுப் புத்தர் சிலை என்று பல விடயங்களும் உள்ளடங்கியிருந்தன. இந்த ஆக்கிரமிப்பு, திணிப்புக்கு எதிராகவுமே பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டிருந்தது. பொதுமுடக்கத்துக்கு தமிழ் பேசும் மக்கள் இவ்வளவு தூரம் ஒத்துழைப்பார்கள் என்று அரசாங்கமும் அவர்களது சகாக்களும் எதிர்பார்க்கவில்லை. இதனால் எழுந்த அழுத்தங்களைத் தொடர்ந்து அரசாங்கமும், அதன் நிறுவனங்களும் சில மாற்றங்களை வெளிக்காட்டத் தலைப்பட்டுள்ளன.

கச்சதீவில் வைக்கப்பட்ட புத்தர் சிலை அகற்றப்பட்டுள்ளது. வெடுக்குநாறி ஆலயத்தில் பூசை வழிபாடுகள் மேற்கொள்வதற்கு தொல்பொருள் திணைக்களம் உட்பட எந்தவொரு அரச திணைக்களமும் தடுக்கமுடியாது என்று நீதிமன்றம் கட்டளையிட்டது. இதன் தொடர்ச்சியாக வெடுக்குநாறி மலையிலிருந்து பெயர்க்கப்பட்ட விக்கிரகங்களை மீள அமைப்பதற்கு தடையில்லை என்றும், பொலிஸார் கைப்பற்றியுள்ள சிலைகளை மீளளிக்கவேண்டும் எனவும் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

அரசாங்கத்துடன் இணங்கிச் சென்று இணக்க அரசியல் நடத்துவதாகக் கூறிக்கொண்டு சரணாகதி அரசியல் நடத்தும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வெடுக்குநாறி மலையில் சிலையை மீளமைப்பதாகச் சொல்லி அங்கே சென்று வெறுங்கையை வீசிக்கொண்டு வந்தார். ஆனால், பொதுமுடக்கப் போராட்டத்தின் பின்னர் வவுனியா நீதிமன்றில் இந்த வழக்கு எடுக்கப்பட்டபோது, சிலைகளை மீளமைப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. தொல்பொருள் திணைக்களம் அங்கு சிலைகளை வைப்பதைத் தடுத்திருந்தது. அதைக்காரணம்காட்டி பொலிஸாரும் முட்டுக்கட்டைபோட்டிருந்தனர். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் அமைச்சரவையில் இது தொடர்பில் ஒப்பாரி மட்டும் வைத்துவிட்டு வாளாதிருந்துவிட்டார். ஆனால், மக்கள் சளைக்கவில்லை. பொதுமுடக்கம் என்கின்ற போராட்டத்தின் தொடக்கப்புள்ளி ஊடாகவே சில விடயங்களைச் சாதித்துள்ளார்கள். 'அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும் என்பதைப்போல' தொடர்போராட்டங்கள் ஊடாகத்தான் எமது உரிமைகளைப் பெற்றுப் பாதுகாக்க முடியும்.

நாளொரு நல்வார்த்தை

"செய்த கடின உழைப்பு சோர்வடையச் செய்த பிறகும், கடின உழைப்பை தொடர்வதன் பெயர்தான் விடா முயற்சி"
– நியூட் ஜிங்க்ரிச்




# கொடிய சட்டவரைவை ஒழிக்க நாளை சகலரும் ஒன்றிணைக!

## கிளிநொச்சி ஊடக அமையம் அழைப்பு

**கிளிநொச்சி, ஏப். 27**

**ஜனநாயக விழுமியங்களை அழித்தொழிக்கும் வகையில் அரசாங்கத்தால் முன்வைக்கப்படவுள்ள நச்சு சட்டவரைவான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிராக குரல்கொடுக்க அனைவரும் நாளை சனிக்கிழமை ஒன்றிணையுங்கள் என கிளிநொச்சி ஊடக அமையும் அழைப்பு விடுத்துள்ளது.**

கிளிநொச்சி ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் நாளை 29 ஆம் திகதி சனிக்கிழமை கிளிநொச்சி சந்தைக்கு முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

முன்வைக்கப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு சட்டமாக்கப்பட்டால் ஜனநாயகத்தின் நான்காவது தூண் பிடுங்கியெறியப்படும். ஊடகத்துறை மிக மோசமாக நசுக்கப்படும். மக்களின் உரிமைகள் சார்ந்து செய்திகள், கட்டுரைகள், கருத்துக்கள் தெரிவிப்பது என அனைத்து ஜனநாயக செயற்பாடுகளும் கேள்விக்குள்ளாகும். ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகத் தங்களது கடமைகளை மேற்கொள்ளமுடியாத நிலைமை ஏற்படும். இந்தச் சட்டவரைவுக்கு எதிராகக் குரல் கொடுக்க அனைவரும் திரளவேண்டும்- என கிளிநொச்சி ஊடக அமையம் அழைப்பு விடுத்துள்ளது. (ச-214)

# ரணிலைப் பலப்படுத்தினால் தமிழர்களுக்குத் தீர்வாம்!

## கூறுகிறார் மனுஷ நாணயக்கார

கொழும்பு, ஏப். 28

தமிழ் மக்களும் அவர்களின் பிரதிநிதிகளும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கரங்களைப் பலப்படுத்தினால் தீர்வை விரைவில் வென்றெடுக்கமுடியும். அதைவிடுத்து இனவாத நோக்குடன் அரசு மீது விமர்சனங்களை முன்வைப்பதால் எதனையும் பெற முடியாது என்று அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"இது ராஜபக்சக்கள் தலைமையிலான ஆட்சி அல்ல. ரணில் தலைமையிலான ஆட்சி. இந்த ஆட்சியில் இனவாதத்துக்கும், மதவாதத்துக்கும் ஒருபோதும் இடமில்லை. தமிழர்களை அரவணைத்தே இந்த அரசு பயணிக்கின்றது. இந்த நிலையில், தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகள் சிலர் இனவாத நோக்குடன் எம்முடன் முட்டி மோதுகின்றனர். அரசை அவர்கள் இனவாதக் கண்ணோட்டத்துடன் நோக்குவதை உடன் நிறுத்த வேண்டும். நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் இந்தச் சந்தர்ப்பத்தில் அரசியல் பிரச்சினைக்கும் தீர்வு காணும் நடவடிக்கையில் நாம் அனைவரும் இறங்க வேண்டும்" - என்றார்.

(ஒ-22)

| நாளை | 29.04.2023 சனிக்கிழமை சித்திரை 16 | சுபநேரம் : 02.58 - 04.28<br>ராகுகாலம் : 08.58 - 10.28 |
|---|---|---|

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு

நல்லூரில் வீடு வாடகைக்கு உண்டு.

076 667 4454

(CS/50214)AH-1


## விற்பனைப் பிரதிநிதி தேவை

எமது நிறுவனத்துக்கு கற்பூரம், ஊதுபத்தி விற்பனை செய்வதற்கு யாழ்.மாவட்டத்துக்கும் கிளிநொச்சி மாவட்டத்துக்கும் விற்பனைப் பிரதிநிதிகள் தேவைப்படுகின்றனர்.
(முன்னனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது)

**Danisht Perfumery Works (Pvt) Ltd**
No.08, Rohini Road, Wellawatta, Colombo -06
011 2500 762 / 077 290 0184

(CS/50213)AH-1


## முதலாம் வருட நினைவலைகள்



பூவுலகில் 15 . 03 . 1946

மகிமைக்குள் 28 . 04 . 2022

## கணபதி நாகமுத்து

"கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள்
இதுமுதல் பாக்கியவான்கள்" (வெளி 14:13)

எம் அன்புத் தந்தையின் ஆத்மா நித்திய மகிமைக்குள் இளைப்பாறுதலடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (CS/502209)AH-1

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### துரைசிங்கம் ஜெயமோகன்

(சிங்கம் சவுண்ஸ் உரிமையாளர்)




புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் ஏழாலை கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட துரைசிங்கம் ஜெய மோகன் (தாடி மாமா) அவர்கள் கடந்த (23.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஏழாலை கிழக்கு ஏழாலை எனும் முகவரியிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (28.04.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளு கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
**077 1233 762, 077 9454 688**
**ஏழாலை கிழக்கு, ஏழாலை.**

## மரண அறிவித்தல்



தோற்றம் 30 . 10 . 1949

மறைவு 27 . 04 . 2023

### அரியகுட்டி அமிர்தராசா (பற்றிக்)

மாம்பிராய் காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமிர்தராசா (பற்றிக்) நேற்று (27.04.2023) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி மேரிப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், றீகன், டெனிஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.04.2023) முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்திலிருந்து ஊறணி புனித அந்தோனியார் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**077 610 3582**

(CS 2468)A-

## ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை
## உப அலுவலகம், சுன்னாகம்.

வட்டாரம்-03, செல்லாச்சியம்மையார் வீதி, ஆதன இல 16 வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் உப அலுவலகத்திற்குட்பட்ட செல்லாச்சியம்மையார் வீதி, சுன்னாகம் எனும் முகவரியில் அமைந்துள்ள ஆதனமானது எமது ஆதனப் பதிவேட்டில் வட்டாரம்-03, செல்லாச்சியம்மையார் வீதி, ஆதன இல: 16ல் Mrs.R. கனக சுந்தரம் & R.இரத்தினம் எனும் பெயரில் உள்ளது.

பிரசித்த நொத்தாரிசு இராமலிங்கம் சபேசன் சபேசன் முகதாவில் வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் தெற்குப்பகுதி உடுவில் கோவிற்பற்று சுன்னாகம் இறை, வலிகாமம் தெற்கு பிரதேசசெயலர் பிரிவு, J/198 கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள "கப்பல்வளவு" எனக்குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பரப்பு 12 குளி 1.32 உடைய ஆதனமானது 2013.09.28 ஆம் திகதிய 5059 ஆம் இலக்க உறுதி மூலம் வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

இவ் ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு விநாயகமூர்த்தி இளங்குமார் அவர்கள் மூலம் 2022.09.17ஆம் திகதிய 1379 ஆம் இலக்க அறுதி உறுதியால், சத்தியபுரம், உடுவில் தெற்கு, சுன்னாகம் என்னும் இடத்தை சேர்ந்த கணபதிப்பிள்ளை கணேசலிங்கம் (196814403223) பெண் புவனேஸ்வரி (197067904000) எனும் பெயரிற்குப் பெயர்மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளார்.

மேலும், உத்தரவு பெற்ற நில அளவையாளர் M.சிற்றம்பலம் அவர்களால் 2022.03.20இல் அளந்து தயாரிக்கப்பட்ட 5132 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 ஆகிய நிலப்பரப்பு 02 குளி 9.00 ஆகும்.

**அதன் எல்லைகளாக,**

கிழக்கு - 12அடி அகலமான பாதை
வடக்கு - மனோகரன் கைம்பெண் கலாவதியின் ஆதனம்
மேற்கு - பொன்னுத்துரை சந்திரலதாவின் ஆதனம்
தெற்கு - பிரதேச சபை வீதி

எனவே இப்பெயர்மாற்றம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் எவராவது இருந்தால் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும் அவ்வாறு எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவோ உரிமை கோரவோ இல்லையெனின் குறித்த ஆதனமானது கணபதிப்பிள்ளை கணேசலிங்கம் பெண் புவனேஸ்வரி எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தரு கின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செயலாளர்**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை.**
**சுன்னாகம்.**

(CS/50210)AH-1

## உதவிக்கு பதிவுசெய்க

சாவகச்சேரி, ஏப்.28

யாழ்ப்பாணம் - தென்மராட்சி பிரதேசத்தில் இதுவரை நலன்புரி நிவாரண உதவிக்குப் பதிவு செய்யாதவர்களின் விவரங்களை இன்று மு.ப. 10 மணிக்கு முன்னர் பதிவு செய்து பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இதுவரை நலன்புரி நிவாரண உதவிக்குப் பதிவு செய்யாதவர்கள் தமது பிரிவு கிராம அலுவலருடன் தொடர்புகொண்டு விவரங்களை பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-9)

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

### பெறுகை அறிவித்தல்

### வெளிவாரி அடிப்படையிலான பாதுகாப்புச்சேவை, சாரதி சேவை வழங்கலுக்கான விலைமனுக் கோரல் 2023/2024

தலைவர், பெறுகைக்குழு அவர்களினால் வலிகாமம் தென்மேற்கு, பிரதேச சபையில் 2023ம் ஆண்டுக்கான பாதுகாப்புச் சேவை, சாரதி சேவை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப் பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இல | சேவை | எதிர்பார்க்கப்படும்/ தேவையான ஆளணி எண்ணிக்கை |
|---|---|---|
| NP/14/41(16)/1/OS/01 | பாதுகாப்புச் சேவை | 04 |
| NP/14/41(16)/1/OS/02 | சாரதி சேவை | 03 |


1) சேவை வழங்குநர்கள் பாதுகாப்புச் சேவை, சாரதி சேவை வழங்கலுக்கான வியாபாரப் பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 2 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.
2) சேவை வழங்குநர்களின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் யாழ் மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
3) சேவை வழங்குநர்கள் பெறுகை ஆவணங்களை வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாயில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 28,04.2023 ஆம் திகதி தொடக்கம் 12.05.2023 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 02.30 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 1000.00 ஐச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
4) பெறுகை ஆவணங்கள் 12.05.2023ம் திகதி பி.ப 02.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு "செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்" என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பிவைத்தல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
5) கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப் பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழுவிற்கு அதிகாரம் உள்ளது.

சி.சபேசன்
செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

(CR 39730) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 16.03.2023 அன்று இறைபதம் அடைந்த

## அமரர் வயிரமுத்து விநாயகமூர்த்தி

அவர்களின் 45 ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (29.04.2023) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நேரில் பங்கேற்ற உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும், தொலைபேசி மற்றும் வலைத்தளங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்த அன்புள்ளங்களுக்கும், இரங்கல் பதாகைகள் மூலம் அனுதாபம் தெரிவித்த அன்புள்ளங்களுக்கும் பல வழிகளிலும் உதவி, ஒத்தாசைகள் வழங்கிய அன்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(CS/50207)AH-1

பாடசாலையடி,
நவக்கிரி, புத்தூர்.

குடும்பத்தினர்.
077 1387578, 077 918 4323

# மரண அறிவித்தல்



## துரையப்பா அன்னம்மா

உடுவிலைப் பிறப்பிடமாகவும், அம்பலவாணர் வீதி, கற்பக்குளையை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா அன்னம்மா கடந்த (23.04.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பாக்கியம் தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - சீதலன் ஆச்சி தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற துரையப்பாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சண்முகத்தின் அன்புச் சகோதரியும், பாஸ்கரன் (உடுவில் -நிரு Video), பிரபாகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், வசந்தி, கலா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், டினோசாந், நிருஜா, கிசாந், கோபிசா, தர்வின், ஜஸ்னிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நாகம்மாவின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/50211)AH-1

தகவல்: குடும்பத்தினர்

077 673 3145

# வளர்ப்பு நாய்கள் தொடர்பான மாநகர சபையின் அறிவித்தல்

1. மாநகர சபை எல்லைக்குள் நாய் வளர்ப்பாளர்கள் தங்கள் வளர்ப்பு நாய்களை வீட்டு வளவினுள் கட்டி வளர்த்தல் வேண்டும்.
2. வளர்ப்பு நாய்களை வருடந்தோறும் மாநகர சபையில் பதிவு செய்து பெற்றுக் கொண்ட உரிமத்தகட்டினை கழுத்துப்பட்டியுடன் இணைத்து வளர்ப்பு நாய்கள் அணிந்திருப் பதை அவற்றின் உரிமையாளர்கள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.
3. வருடந்தோறும் வளர்ப்பு நாய்களுக்கு ஏ.ஆர்.வி (A.R.V) தடுப்புசி ஏற்றுவதுடன் அதற்குரிய பதிவட்டையினையும் பேணுதல் வேண்டும்.

   (**குறிப்பு :-** வருடந்தோறும் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரிவுகளில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பிரிவினரால் நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.
4. வீதி விபத்துக்களை ஏற்படுத்தும் விதமாக அல்லது பொதுமக்களுக்கு தீங்கு விளை விக்கும் விதமாக வளர்ப்பு நாய்களை வீதியில் நடமாட விடுவதை தவிர்த்தல் வேண்டும்.

**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

# மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை குடியியல் நடவடிக்கைச் சட்டக்கோவையின் பிரிவு 16 இன் கீழாக அறிவித்தல்

**நம்பிக்கை பொறுப்புச் சட்டத்தின் பிரிவு 112ன் கீழான விண்ணப்பம்**

**பொன்னையா வியாகேஸ்**
**துவாலி வீதி**
**உடுப்பிட்டி**

**மனுதார்**

**வழக்கு இலக்கம் : TR/190/22**
**தன்மை : நம்பிக்கை சொத்து**
**பெறுமதி : 500,000/-**
**நடவடிக்கை முறை : சுருக்க முறை**

**எதிர்**

**1. துரைச்சாமி ரவி,கார்த்திகேயர் வீதி**
**புலோலி தெற்கு புலோலி**
**2. துரைச்சாமி கோபு**
**துவாலி வீதி உடுப்பிட்டி**

**எதிர் மனுதார்**

மேற்படி இலக்க வழக்கின் மனுதாரரால். உடுப்பிட்டி தெற்கு உடுப்பிட்டி J/354 கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள வல்லையப்புலம் பிள்ளையார் ஆலயத்தினை முகாமைத்துவம் செய்வதற்கு உரிமையாக்கற் கட்டளையை (Vesting Order) வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை பிரதான நிவாரணமாக கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே மனுதாரரின் மனுவில் மனுதாரரால் வேண்டப்பட்ட நிவாரணம் தொடர்பில் எவராயினும் ஏதேனும் ஆட்சேபனை தெரிவிக்க விரும்பின் 2023.05 11 ஆம் திகதி காலை 9.00க்கு இம்மன்றின் திறந்த மன்றில் தோன்றி தெரிவிக்குமாறு குடியியல் நடவடிக்கை சட்டக் கோவையின் பிரிவு 16 இன் கீழான அறிவித்தல் தரப்படுகின்றது.

**2023ஆம் ஆண்டு சித்திரை மாதம் 26 ஆம் திகதி**

**வரைவு**
**மனுதாரர் சட்டத்தரனி**

**மன்றின் கட்டளைப்படி**
**பதிவாளர், மாவட்ட நீதிமன்றம்**
**பருத்தித்துறை.**

**முதலாம் ஆதன அட்டவணை**

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம், வடமராட்சிப் பகுதி. உடுப்பிட்டிக் கோவிற்பற்று. வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை. வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகம். உடுப்பிட்டி தெற்கு உடுப்பிட்டி J/354 கிராம அலுவலர் பிரிவு தனக்கார குறிச்சியிறை: **"வல்லையப்புலம்"** நிலப்பரப்பு 32. இது நில அளவையாளர் V. சண்முகலிங்கத்தால் **09.06.1938ஆம்** திகதியில் 3403ம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தின்படி A,B,C,D,E,F,G,H,K துண்டுகள் நிலபர 28. இதற்கெல்லைகள் **கிழக்கும் வடக்கும்** சிவகுமார சூரியரின் உரிமைக்காரரின் ஆதனம். **மேற்கு** வயிரவி முருகருக்கும் சின்னக்குட்டி கார்த்திகேசுவிற்கும் வல்வெட்டித்துறை சிவன் கோவிலுக்குமுரிய ஆதனங்கள் **தெற்கு** குறித்த வல்வெட்டித்துறை சிவன் கோவிலுக்குரிய ஆதனமும் றோட்டும்.

**இரண்டாம் ஆதன இடாப்பு**

மேற் குறிப்பிட்ட படத்தில் B என காண்பிக்கப்பட்ட துண்டு நிபர 01 அதற்குள் அமையும் கோயில் இதற்கு எல்லைகள் கிழக்கு குறித்த படத்தில் G என காண்பிக்கப்பட்ட பாதை நிலம் வடக்கு குறித்த படத்தில் A என காண்பிக்கப்பட்ட துண்டு மேற்கு வயிரவி முருகரின் ஆதனம் தெற்கு குறித்த படத்தில் C என காண்பிக்கப்பட்ட ஆதனம் இதனடங்கலும் குறித்த G துண்டுக்கூடாக பாதை உரித்தும்.

**மூன்றாம் ஆதன இடாப்பு**

மேற்படி இறை குறிப்பிட்ட படத்தில் D என காண்பிக்கப்பட்ட கேணி நிபர 02 குளி 15 3/4 இதற்கு எல்லைகள் கிழக்கும் வடக்கும் குறித்த படத்தில் A என காண்பிக்கப்பட்ட துண்டு மேற்கு குறித்த படத்தில் G என காண்பிக்கப்பட்ட துண்டு தெற்கு குறித்த படத்தில் G,A எனக் காண்பிக்கப்பட்ட துண்டுகள் இதனடங்கலும் குறித்த G துண்டுக்கூடாக பாதை உரித்தும்.

**நான்காம் ஆதன இடாப்பு**

மேற்படி இறை குறிப்பிட்ட படத்தில் H என காண்பிக்கப்பட்ட படத்திற்கு என ஒதுக்கப்பட்ட நிபர 00 குளி 15 1/4 இதற்கு எல்லைகள் கிழக்கும் வடக்கும் குறித்த படத்தில் A என காண்பிக்கப்பட்ட துண்டு மேற்கு குறித்த படத்தில் G எனக் காண்பிக்கப்பட்ட பாதை நிலம் தெற்கு றோட்டு இதனடங்கலும் குறித்த G துண்டுக்கூடாக பாதை உரித்தும்.

**ஐந்தாம் ஆதன இடாப்பு**

மேற்படி இறை குறிப்பிட்ட படத்தில் K என காண்பிக்கப்பட்ட துண்டும் இதற்குள் அமையும் கிணறும் குளி 7 இதற்கு எல்லைகள் கிழக்கும் வடக்கும் குறித்த படத்தில் F என காண்பிக்கப்பட்ட துண்டு மேற்கு குறித்த படத்தில் E என காண்பிக்கப்பட்ட துண்டு தெற்கு றோட்டும் குறித்த படத்தில் F என காண்பிக்கப்பட்ட துண்டும்

**மன்றின் கட்டளைப்படி**
**பதிவாளர், மாவட்ட நீதிமன்றம்**
**பருத்தித்துறை .**

**வரைவு**
**மனுதாரர் சட்டத்தரணி**

(CR/39729)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே மாத இறுதிக்குள் பாடப்புத்தகங்கள்

கொழும்பு, ஏப். 28

தற்போது தட்டுப்பாடு நிலவும் மாணவர்களுக்கான பாடப்புத்தகங்களை அடுத்த மாத இறுதிக்குள் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கல்வி வெளியீட்டு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் திணைக்களம் மேலும் தெரிவிக்கையில், இதுவரை அச்சிடப்பட்ட பாடப் புத்தகங்கள் பாடசாலைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றன.

மேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகளுக்கு கல்வி வெளியீட்டு திணைக்களத்திலிருந்தே பாடப் புத்தகங்கள் நேரடியாக விநியோகிக்கப்படுகின்றன. அத்துடன் பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சிப் புத்தகங்களும் இவ்வாறே விநியோகிக்கப் படுகின்றன. இந்தமுறை 33 மில்லியன் பாடப் புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளதுடன் இதற்காக 16 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது - என்றுள்ளது. (ஒ-14-இ)

## பாதணி, புத்தகப்பை விலைகள் குறைப்பு

### நிதி இராஜாங்க அமைச்சரிடம் உற்பத்தியாளர்கள் உறுதி

கொழும்பு, ஏப். 28

எதிர்வரும் மே மாதம் 9ஆம் திகதியின் பின்னர் பாடசாலை மாணவர்களுக்கான பாதணிகள் மற்றும் புத்தகப்பை என்பன வற்றின் விலைகளை 500 ரூபா முதல், ஆயிரம் ரூபா அளவில் குறைக்கப்படவுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவிடம் உற்பத்தியாளர்கள் உறுதியளித்துள்ளனர்.

மாணவர்களுக்கான பாதணிகள் மற்றும் புத்தகப்பைகள் உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள், நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சந்தித்தனர்.

சந்திப்பில், டொலரின் பெறுமதி குறைவடைந்துள்ள நிலையில் உற்பத்திக்கான மூலப்பொருள்களின் விலைகள் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எனவே இந்த நலனை பாடசாலை மாணவர்களுக்கு வழங்குமாறு நிதி இராஜாங்க அமைச்சர் கோரினார். அதற்கமையவே விலைகளைக் குறைப்பதற்கு உற்பத்தியாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர். (ஒ-14-இ)

## கோத்தாபய ராஜபக்சவுக்கு மன்னிப்பே கிடையாது

### அத்துரலிய ரத்ன தேரர் சாடல்

கொழும்பு, ஏப். 28

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை நாட்டு மக்கள் மன்னிக்க மாட்டார்கள். வரலாற்றில் அவருக்கு ஒருபோதும் மன்னிப்புக் கிடையாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தன தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கோத்தாபய ராஜபக்சவின் தான்தோன்றித்தனம் காரணமாகவே நாடு இந்த நிலைக்குச் சென்றது. அவர் போன்ற பலவீனமான ஒருவரை ஆட்சிக்குக் கொண்டு வந்தது பிழை என்பதை இப்போது உணர்கின்றேன். இயற்கை விவசாய கருத் திட்டத்தைக் கொண்டு வந்தது நான்தான். ஆனால், அதை 24 மணிநேரத்துக்குள் நடைமுறைப்படுத்துமாறு நான் கூறவில்லை. கோத்தாபய அதை உடனடியாக நடைமுறைப்படுத்தப் போய்த்தான் இவ்வளவு பிரச்சினையும். அது தொடர்பில் எனது கருத்துக்களைச் சொல்வதற்கும் அவர் இடம் தரவில்லை. அவரை நாட்டு மக்கள் மன்னிக்கமாட்டார்கள்.

வரலாற்றில் அவருக்கு ஒருபோதும் மன்னிப்புக் கிடையாது - என்றார். (ஒ-22)

## நச்சரிக்கிறது மஹிந்த தரப்பு

### கூறுகிறார் விமல்

மொட்டுக் கூட்டணியிலிருந்து பிரிந்து சென்ற தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ, புதிய ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில ஆகியோருக்கு மஹிந்த தரப்பு தொடர்ச்சியாக அழைப்பு விடுத்து வருகின்றது. இந்தத் தகவலை நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

மஹிந்த தரப்புடன் வந்து இணையுமாறு அமைச்சர் டிரான் அலஸின் ஊடாகப் பல தடவைகள் அழைப்பு விடுக்கப்பட்டது எனவும், இப்போதும் இந்த அழைப்பு தொடர்கின்றது என்றும் அவர் கூறினார். தாம் நிலையான கொள்கையில் இருப்பதால் அந்த அழைப்பை நிராகரித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-22)

## யாழ். நகர வர்த்தகர்களுக்கான அறிவித்தல்

யாழ். மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பகுதியால் நிறுவை, அளவை, நிறுக்கும் கருவிகளுக்கு இன்று (28.04.2023) காலை 9.00 மணி முதல் மாலை 2.00 மணி வரை யாழ் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் பரிசோதகரால் பரிசோதித்து முத்திரையிடப்படும் என்பதனை அறியத்தருகின் றோம். ஆகவே வர்த்தகர்களாகிய தாங்கள் இச்சந்தர்ப்பத்தினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**யாழ். வணிகர் கழகம்**
**165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**

(CR 39734) A-1

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலக மீள்குடியேற்றக் கிளையில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **திருமதி பவதாரணி அருட்குமரன்** அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி சிதம்பரநாதன் தருமநாயகி

அவர்கள் கடந்த 2023.04.25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நலன்புரிக்கழகம்**
**மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம்.**

(CR 39732 B) A-1

## மரண அறிவித்தல்



### துரைச்சாமி தியாகராசா

நாவற்குழியை பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொண்ட துரைச்சாமி தியாகராசா அவர்கள் நேற்று (27.04.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
இல.18, [illegible] வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(CS 24645) A-1

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலக அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **திருமதி மயூரதி கேதீஸ்வரன்** அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி சிங்கராஜா யசோதராதேவி

அவர்கள் கடந்த 2023.04.13 ஆம் திகதி வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நலன்புரிக்கழகம்**
**மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம்.**

(CR 39732 A) A-1

## 11ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 16 . 06 . 1946 — மறைவு 28 . 04 . 2012

### அமரர் புண்ணியமூர்த்தி வேலும்மயிலும்

ஆறிவரும் புண்ணை ஆறவிடாமல் அனுதினமும்
உம் நினைவுகள் எம்மைவாட்டி வதைக்குது யார்அறிவார்!
திறமைக்கு முதன்மை தந்து திருட்டுக்கு தடைவிதித்து
நிறைவாக வாழ வழி வகுத்து
நேரிய வழிக்கு இட்டுச் சென்றதை யார் அறிவார்!

ஆண்டென்பார் திங்கள் என்பார்
அட்டமி - நவமி என்பார்
நீண்டதோர் தொடரகத்தில்
பூண்டதன் முயல்வினாலே
புதுமைகள் கண்டு வாழ்வை
“ஆண்டவன்” போல் ஆண்ட மனிதன்
இவர் - யார் அறிவார்!

என்றும் உங்கள் நினைவுகளுடன்..
**குடும்பத்தினர்.**

(CS 24641) A-1

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 10 . 06 . 1942 — ஆண்டவன் அடியில் 27 . 04 . 2023



### திருமதி வேலருட்செல்வி செல்வநாயகம்

வட்டுமேற்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலருட்செல்வி செல்வநாயகம் அவர்கள் நேற்று (27.04.2023) வியாழக்கிழமை நண்பகல் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வல்லிபுரம் வள்ளியம்மை தம்பதியரின் அருமை மருமகளும், காலஞ்சென்ற சிங்கர் செல்வநாயகம் அவர்களின் அன்பு மனைவியும், சுரேந்திரா (கொலண்ட் கண்ணா), பாலேந்திரா (முகுந்தா), நந்தினி ஆகியோரின் அருமைத் தாயாரும், சிவந்தா, மீரா, அகிலன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சுஜான், சுஜன்ஷன், கிருஷாந், கீர்த்திகா, தருண் ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும், த.வெள்ளியங்கிரிநாதன் அவர்களின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2023) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு தென் மேற்கு, வட்டுக்கோட்டை,
076 023 8995


தகவல்:
குடும்பத்தினர்.

(CR 39734) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
04 . 02 . 1944



மறைவு
24 . 04 . 2023

## நாகமணி பூபாலசிங்கம் (பூபாலு)

யாழ். உரும்பிராய், அன்னங்கையைப் பிறப்பிடாகவும், உரும்பிராய் அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி பூபாலசிங்கம் கடந்த (24.04.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி - முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான குட்டித்தம்பி - கண்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும், இராசலட்சுமியின் கணவரும், வரதன் ( BSc B.biotech (Gri) B.Teaching (western syd) Director of chemistry plus maths coaching toongabbie pty ltd, Chemistry ஆசிரியர் / Tutor Australia) Maths Tubor (Australia) DNA Production senior scientist, ஜெயசாந்தன் ( கோக்கன் - சுவிஸ்), ஜெனோதாஸ் (BSc (Hons) Computer Science Kingston University of London), எடிசன் (ஜேர்மனி), கோகிலா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கீதாஞ்சலி, வனிதா, ஜெயசீலி, சிவசோதி, உமாகாந்தன் ( BSc (Cey)) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கரீஸ்ராகவன் (மாணவன் - Faculty / School of Engineering and Telecomunications (University of New South Wales) (UNSW)), பிரியங்கா, வாகேஷ், ரிக்திஹன் (Information Technology), சைந்திஹன், சகானா, பூவிகா ( University ESSEN - Germany ), ஜனித், அபிநயா, அட்சயா, ஆதித்யா, பானுஜா ஆகியோரின் அன்புப் பேரனும், சிவக்கொழுந்து (பவளம்), காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, சொர்ணம், தவமணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற சின்னத்துரை, நவரட்ணம், இராமசாமி, கமலா, பாக்கியலீலா, தர்மவதி, இரத்தின சிங்கம், வவா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பின் உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அம்மன்வீதி,**
**உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS/ 502012)AH-1

076 4[illegible] 2814

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமுடக்கத்தால் கிடைத்தது என்ன?

## இப்படிக் கேட்கிறார் அங்கஜன்

யாழ்ப்பாணம், ஏப். 28

பொதுமுடக்கங்களால் நாம் பெற்றுக்கொண்டவை என்ன என்பதையும் அவற்றால் யார் லாபமடைந்தார்கள் என்பதையும் நாம் சுயவிமர்சனம் செய்து உணர்ந்து கொள்ளவேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

முன்னெடுக்கப்பட்ட பொதுமுடக்கமானது மக்களுடைய இயல்பு வாழ்வை பாதித்துள்ளதே தவிர, அரசாங்கத்தையோ அல்லது அதனுடைய இயக்கத்திலோ எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. வடக்கு - கிழக்கில் அன்றாட வருமானம் பெறுபவனை நிர்க்கதியாக்கி விட்டு, இங்கே நாடாளுமன்ற கூட்டத்துக்கான வருமானத்தைப் பெறுவதற்காக தம்மை மக்கள் பிரதிநிதிகள் எனக் கூறிக்கொண்டு வந்திருக்கிறார்கள். வாக்கு அரசியலுக்காக தம்மை தனித்தனியாக அடையாளம் காட்டிக்கொண்டும், தனித்தனியான கொள்கையுள்ளவர்களாக சொல்லிக்கொண்டும், ஒருவருக்கொருவர் கடுமையான தனிமனித விமர்சனங்களை செய்துகொண்டும் இருந்தவர்கள்தான் மக்களை பாதிக்கும் பொதுமுடக்கத்துக்கு ஒன்றாக அழைப்பு விடுத்தவர்கள். பொதுமுடக்கம் என்ற போராட்ட வடிவத்துக்கான நோக்கமும், அது ஏற்படுத்தும் தாக்கமும் நியாயமானதாக இருந்தால் மாத்திரமே அது மக்களரசியல் ரீதியான நன்மையை பெற்றுத்தரும். வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கப்பட்ட பொதுமுடக்கம் முழு அளவில் வெற்றியடையாமல் போனதற்கு காரணம் இதுவே. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிரான போராட்டமென்பது அரசியல் ரீதியாக முன்னெடுக்கப்பட வேண்டும். புதிய சட்டத்தின் பெயரால் எமது மக்களை மேலும் அடக்க நினைக்கும் அரசின் இந்த நடவடிக்கையை நாமும் எதிர்க்கின்றோம் - என்றுள்ளது. (ஒ-159)

# பொதுமுடக்கத்துக்கு ஆதரவு: தமிழ்பேசும் மக்களுக்கு நன்றி

**யாழ்ப்பாணம், ஏப். 28**

**வடக்கு - கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்ட பொதுமுடக்கத்துக்கு ஆதரவளித்த அனைவருக்கும் இந்தப் போராட்டத்துக்கு அழைப்புவிடுத்த, தமிழ்த் தேசியப் பரப்பில் அரசியல் பணியாற்றிவரும் ஏழு கட்சிகளும் கூட்டாக தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளன.**

இதுகுறித்து அவை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையின் விவரம் வருமாறு:

இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் கலாசாரம் பண்பாடு மற்றும் அவர்களது புராதன சின்னங்களை அழித்தொழித்து அவ்விடங்களில் புத்தகோயில்களைக் கட்டி, பௌத்த சமய திணிப்பை ஏற்படுத்துவதற்கு எதிராகவும் இலங்கை அரசாங்கம் கொண்டுவர உத்தேசித்துள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிராகவும் தமது எதிர்ப்பை முழுமையாகப் பதிவு செய்யவும் தமது கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்ளவும் வடக்கு - கிழக்கில் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் இத்தகைய மிலேச்சத்தனமான நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தக்கோரியும் வடக்கு - கிழக்கில் வாழ்கின்ற தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டு நடத்திய பொதுமுடக்கத்துக்கு பேராதரவு கிடைத்துள்ளது.

இந்த முடக்கத்தைத் தடுப்பதற்கு அரசாங்கம் பல வழிகளிலும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. இவை அனைத்தையும் நிராகரித்து கோரிக்கையின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொண்ட தமிழ் முஸ்லிம் மக்கள் அதற்குத் தமது உணர்வுபூர்வமான முழுமையான ஒத்துழைப்பை நல்கினார்கள். தமிழ் மக்களின் இவ்வலுவான கோரிக்கைகளை ஜனாதிபதி மாத்திரமல்லாமல், இந்தியா மற்றும் சர்வதேச நாடுகளும் தமிழ்பேசும் மக்களின் போராட்டத்தின் நியாயத்தை உணர்ந்து, இவற்றைத் தீர்ப்பதற்கு தமது முழுமையான ஒத்துழைப்பைத் தரவேண்டும்.

வடக்கு - கிழக்கில் முழு முடக்கப் போராட்டம் அறிவித்தவுடன், வடக்கு கிழக்கில் சிங்கள - பௌத்தமயமாக்கல் நடவடிக்கைகள் இடம்பெறவில்லை என்றும் அது ஒரு தவறான கருத்து என்றும் ஜனாதிபதி ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார். நாம் ஜனாதிபதியிடம் கேட்பதெல்லாம், தமிழ் சைவ மக்கள் தமது ஈமக்கடமைகளைச் செய்யும் கன்னியாய் வெந்நீரூற்றை பௌத்த பிக்குகள் தம்வசம் வைத்திருப்பது தவறான செய்தியா? நீதிமன்ற உத்தரவையும் மீறி குருந்தூர் மலையில் புத்த கோயில் கட்டப்படவில்லையா? வெடுக்குநாறி மலையில் இருந்த ஆதிசிவன் சிவலிங்கத்தை உடைக்கவில்லையா? வடக்கு - கிழக்கின் பல பிரதேசத்தில் தொல்பொருள் இடங்கள் என்ற பெயரில், எமது கோயில்கள், எமது பிரதேசங்களை நீங்கள் அபகரிக்கவில்லையா? ஆகவே, நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாகிய நீங்கள் இவை அனைத்தையும் உடனடியாக நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நாங்கள் கோருகிறோம். இதற்குரிய நடவடிக்கைகளை நீங்கள் எடுக்காமல் நீங்கள் கண்டுகொள்ளாமல் இருப்பீர்களாக இருந்தால், தமிழ் பேசும் மக்களை நீங்கள் ஒரு தொடர் போராட்டத்திற்கு அழைக்கின்றீர்கள் என்பது அர்த்தமாகும் - என்றுள்ளது. (ஒ-125)

# ஆட்சியாளர்கள் மீது தமிழருக்கு அதிருப்தி

## பொதுமுடக்கம் ஊடாக ஐ.எம்.எப்.க்கும் செய்தி என்கிறார் புளொட் முக்கியஸ்தர் பா.கஜதீபன்

யாழ்ப்பாணம், ஏப். 28

சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எப்.) போன்ற இலங்கைக்கு உதவி வழங்கும் தரப்பினருக்கும், பொதுமுடக்கப் போராட்டம் தெளிவான செய்தியை வழங்கியுள்ளது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு காணப்பட வேண்டுமென்பதுடன், ஆட்சியாளர்களில் தமிழ் மக்கள் தொடர்ந்தும் அதிருப்தியில் உள்ளனர் என்ற விடயம் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார் வடமாகாணசபை முன்னாள் உறுப்பினரும் புளொட் அமைப்பின் முக்கியஸ்தருமான பா.கஜதீபன்.

பொதுமுடக்கப்போராட்டத்தை தொடர்ந்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது,

பொதுமுடக்கத்துக்கு 7 கட்சிகளின் தலைவர்கள் அழைப்பு விடுத்திருந்தனர். அவர்கள் அழைப்பு விடுத்ததே தவிர, இதனை வெற்றியடையச் செய்தது தமிழ்த் தேசிய உணர்வுள்ள பொதுஅமைப்புக்களும், சங்கங்களும், மக்களுமே. தமிழ்த் தேசிய உணர்விலேயே தொடர்ந்தும் பயணிக்கிறோம் என்பதை மக்கள் இன்று மீண்டும் சர்வதேச சமூகத்துக்கும், தென்னிலங்கை ஆட்சியாளர்களுக்கும், வடக்கு - கிழக்கிலுள்ள அரச முகவர்களுக்கும் தெளிவாக புரிய வைத்துள்ளனர்.

இதனால்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதற்றமடைந்து, இந்த போராட்டம் தேவையற்றது என்றார். மஹிந்த ராஜபக்சவும் போராட்டத்துக்கு எதிராக கருத்து தெரிவித்திருந்தார். அவருடன் இணைந்து, அங்கஜன் இராமநாதனும் இவ்வாறான கருத்தை தெரிவித்திருப்பதில் நாம் ஆச்சரியமடையவில்லை.

பொதுமுடக்கத்தால் மக்களின் பிரச்சினைகள் முழுமையாக தீர்ந்து விடாது என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான். விடுதலைப் பயணமென்பது நீண்ட மரதன் ஓட்டமென்பது, எமது மக்களுக்கு யாரும் சொல்லிப் புரிய வைக்க வேண்டிய விடயமல்ல. பொதுமுடக்கத்தால் பலர் ஏதோவொரு அசௌகரியப்பட்டிருக்கக்கூடும். என்றாலும், தேசியத்தின் பெயராலும், இனவிடிவின் பெயராலும், இன ஒற்றுமையின் பெயராலும் அதைத் தாங்கிக் கொள்ளும் சக்தியுடன்தான் அவர்கள் இன்னுமிருக்கிறார்கள் என்பதை புரிய வைத்துள்ளனர்.

அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவிகளை வகிப்பவர்கள் கூட, தமிழ் மக்களின் எழுச்சியை பார்த்து பயந்து பதுங்கியிருந்த போது, அப்போதைய ஐ.தே.க. அரசில் இணைந்து அமைச்சுப் பதவியேற்ற அகில இலங்கை தமிழ் காங்கிரஸினர் இப்பொழுது இந்தப் போராட்டத்தை பகிரங்கமாகவே எதிர்த்தனர். அவர்களின் அரசியல் வரலாறு காலம்காலமாக இதுதான்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியாகச் செயற்பட்டாலே ஆதரிப்போம் என மக்கள் வெளிப்படுத்தியுள்ள இந்தச் செய்தியை, தமிழ் தரப்புக்கள் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். முக்கியமாக இந்தச் செய்தி அகில இலங்கை தமிழ் காங்கிரஸுக்கே வழங்கப்பட்டுள்ளது - என்றுள்ளது. (ஒ-125)

# தன்பாலின ஈர்ப்பாளர் குற்றவாளிகள் அல்லர்!

## சட்டங்களை அகற்றுக இலங்கைக்கு ஐ.நா. வலியுறுத்து



கொழும்பு, ஏப். 28

தன்பாலின ஈர்ப்பாளர்கள் மற்றும் மாற்றுபாலினத்தவர்களை குற்றவாளிகளாக கருதப்படலாகாது. தன்பாலின உறவுகளைக் குற்றமாக்கும் சட்டங்கள் நீக்கப்படவேண்டும் என இலங்கை அரசாங்கத்துக்கு ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

ஓரினச்சேர்க்கை மக்களுக்கு எதிரான பாகுபாட்டையும் துன்புறுத்தலையும் நிறுத்தி அவர்களுக்கு எதிராக வன்முறையில் ஈடுபடுபவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவும் அந்தக் குழு பரிந்துரைத்துள்ளது.

எனினும், குற்றவியல் சட்டத்தின் தற்போதுள்ள பிரிவு 365 மற்றும் 365ஏ இன் கீழ், சிறுவர்கள் "குற்றவாளிகளாகக் கருதப்படுகிறார்கள்" என்பதை அந்தக் குழு சுட்டிக்காட்டிய போது, அரச நடைமுறையின் கீழ், சிறுவர்கள் குற்றவாளிகளாகக் கருதப்படுவதில்லை என்று இலங்கை அரசாங்கம் தெளிவுபடுத்தியது.

பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் ஷர்மிளா கோனவல தலைமையிலான நகர்ப்புற குடிமக்கள் போன்ற அமைப்புகளால் முன்மொழியப்பட்ட குறித்த சட்டவரைவு , சிறுவர்களுக்கு தீங்கு விளைவிப்பதுடன் சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு ஆளாக நேரிடும் என பரப்பப்படுகிறது.

இந்தச் சட்டத்தை இயற்றினால் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு ஆளாக நேரிடும் என்று பரப்பப்படும் "பொய்களை" நம்ப வேண்டாம் என்று அந்தக் குழு வலியுறுத்தியது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் கட்ட

## அரிசி விநியோகம் யாழில் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஏப். 28
இரண்டாம்கட்ட அரிசி விநியோகப் பணிகள் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன. வேலணை பிரதேச செயலகத்தில் காலை 9.15 மணிக்கும், தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் மு.ப. 11.15 மணிக்கும் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ம)

### திஸ்ஸ...

யாழ்ப்பாணத்தின் மிக உயரமான பௌத்த மத விகாரையாக தையிட்டி திஸ்ஸ விகாரையை அமைப்பதற்கு மைத்திரி - ரணில் அரசாங்கத்தின் காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. தையிட்டி மகா வித்தியாலயத்துக்குப் பின்புறமாக கலைவாணி வீதிக்கு நெருக்கமான தனியார் காணியை ஆக்கிரமித்து இந்த விகாரையை அமைக்கும் பணிகளை முன்னெடுத்தனர். இதற்கு பொதுமக்களிடமிருந்து கடும் எதிர்ப்புகள் வெளிப்பட்டிருந்த நிலையில் அந்த விகாரையை அமைக்கும் பணிகள் தாமதப்படுத்தப்பட்டன. எனினும் கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றதன் பின்னர் அப்போது இராணுவத் தளபதியாக இருந்த சவேந்திரசில்வா விகாரை அமைக்கும் பணிகளை மீண்டும் ஆரம்பித்து வைத்தார். இந்த நிலையில், தற்போது விகாரைக்காக 100 அடியில் தூபியொன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த விகாரையின் அமைவிடத்துக்கு அருகிலுள்ள நிலங்களின் உரித்துத் தொடர்பில் 8 பேர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளனர். அதேபோல், தையிட்டி திஸ்ஸ விகாரை ஒரு சட்டவிரோதக் கட்டுமானம் என்றும் அதை அமைப்பதை அனுமதிக்கக்கூடாது என்றும் வலி. வடக்கு ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. எனினும் எந்தக் கருத்தையும் பொருட்படுத்தாமல் விகாரைக்குரிய கட்டுமானப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

**சட்டவிரோத கட்டுமானத்துக்கு அரச நிறுவனங்களின் ஆதரவு**

தையிட்டி திஸ்ஸ விகாரைக் கட்டுமானத்தை (தூபி) மொரட்டுவ பல்கலைக்கழக கட்டடக் கலைப்பீடம் வடிவமைத்துள்ளது. இதற்கான தொழில்நுட்ப நிபுணத்துவ உதவிகளை பேராசிரியர் சமித்த மானவடு மற்றும் பேராசிரியர் நிமால் டி சில்வா ஆகியோர் வழங்கியுள்ளனர். இதற்கான நிதி உதவிகளை பௌத்த சாசன அமைச்சு வழங்கியுள்ளது. சட்டவிரோதக் கட்டடம் ஒன்றுக்கு ஒரு பல்கலைக்கழகம் எவ்வாறு வடிவமைப்புக்களை மேற்கொள்ளமுடியும்? என்றும் எதன் அடிப்படையில் பௌத்த சாசன அமைச்சு நிதியுதவி வழங்கியது? என்றும் ஆர்வலர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இலங்கையின் உயரமான பௌத்த தூபிகளாகக் கருதப்படும் ருவன்வெலிசாய (338 அடி), ஜெதவனாராமய (400 அடி) அபயகிரி (246 அடி), மிரிசவெட்டி (197 அடி), தூபாராமய (66 அடி) ஆகியவற்றின் வரிசையில் தையிட்டி திஸ்ஸ ராஜா மகா தூபியும் (100 அடி) தற்போது இணைந்துள்ளது என்றும் இது விகாரையை மையப்படுத்தி தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவுள்ள பௌத்த ஆக்கிரமிப்புக்கான ஒரு தளம் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (அ-ம-26)

### ஊழல்...

ஆரம்பக்கட்ட சபை நடவடிக்கைகளை முடிவடைந்த பின்னர் மேற்படி சட்டவரைவு, நாடாளுமன்றத்தில் முதலாம் வாசிப்புக்கெனச் சமர்ப்பிக்கப்பட்டது. ஊழல் எதிர்ப்பு சட்டவரைவுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்த நிலையில் ஏப்ரல் முதல் வாரத்தில் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. நாடாளுமன்றத்தில் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், அதனை 14 நாள்களுக்குள் சவாலுக்குட்படுத்தமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

### வெடுக்குநாறி...

தொல்லியல்திணைக்களம் நீண்டகாலமாக பிரயத்தனம்செய்து வந்தது. இந்த நிலையில் கடந்த மார்ச் 26ஆம் திகதி வெடுக்குநாறி மலையிலிருந்த ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம் உருத்தெரியாமல் அடித்து உடைத்து சிதைக்கப்பட்டது. சிவலிங்கம் பெயர்த்து எடுக்கப்பட்டு அருகிலுள்ள பற்றைக்குள் வீசப்பட்டிருந்தது. அம்மன் சிலையின் தலை உடைத்து எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. வைரவர் சூலம் பிடுங்கியெறியப்பட்டிருந்தது. பிள்ளையார் சிலை காணாமல் ஆக்கப்பட்டிருந்தது. இந்தச் சம்பவம் தொடர்பில் நெடுங்கேணி பொலிஸில் ஆலய நிர்வாகத்தினர் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இது தொடர்பான வழக்கில் கடந்த 24ஆம் திகதி நீதிமன்றம் கட்டளை வழங்கியிருந்தது. ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் வழிபாடுகளை நடத்துவதற்கு எந்தவொரு அரச திணைக்களமும் தடை விதிக்கமுடியாது என்று அந்தக் கட்டளையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த நிலையில் நேற்றையதினம் வழக்கு மீள எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆலய நிர்வாகம் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையானார். தொல்லியல் திணைக்களத்தினர் சமுகமளிக்கவில்லை. நெடுங்கேணி பொலிஸாரே மன்றில் தோன்றியிருந்தனர்.

கடந்த 24ஆம் திகதி இந்த நீதிமன்றம் வழங்கிய உத்தரவை முழுமையாக நிறைவேற்றுவதாக இருந்தால் ஆலய விக்கிரகங்கள் தேவை. எனவே நீதிமன்ற உத்தரவை முழுமையாக நடைமுறைப்படுத்த ஏதுவாக விக்கிரகங்களை வெடுக்குநாறிமலையில் மீள நிறுவுவதற்கான உத்தரவை நீதிமன்றம் பிறப்பிக்கவேண்டும் என்று சுமந்திரன் தனது வாதத்தை முன்வைத்தார்.

இதன்போது நெடுங்கேணி பொலிஸார், வெடுக்குநாறிமலையைத் தொல்லியல் திணைக்களத்தினர் மேற்பார்வை செய்கின்றனர் என்று குறிப்பிட்டுள்ளனர். அத்துடன் விக்கிரகங்கள் சான்றுப் பொருள்களாக அறிக்கையிடப்பட்டுள்ளன என்றும் மன்றில் தெரிவித்தனர்.

சான்றுப்பொருள்களாக குறிப்பிட்டால் அவை தொடர்பான விவரங்களை மன்றுக்கு அறிக்கையிட்டுவிட்டு அதனை மீளப் பிரதிஷ்டை செய்ய விடுவிக்குமாறு சட்டத்தரணி சுமந்திரன் கோரினார். வழக்கின் சான்றுப்பொருள்கள் வழிபாட்டுப்பொருள்களாக இருப்பதால் மன்றுக்கு அறிக்கையிட்டு அவற்றை விடுவிக்குமாறு நீதிபதி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். அது தொடர்பில் ஏற்கனவே மன்றுக்கு அறிக்கையிட்டுள்ளதாகப் பொலிஸார் நீதிபதியிடம் குறிப்பிட்டனர். மன்றுக்கு அறிக்கையிட்டிருந்தால் சான்றுப் பொருள்களை மன்றில் ஏன் ஒப்படைக்கவில்லை? என்று பொலிஸாரிடம் நீதிபதி கேள்வி எழுப்பினார். அவை தெய்வ விக்கிரகங்களாக இருப்பதால் மன்றிடம் ஒப்படைக்கவில்லை என்று பொலிஸார் குறிப்பிட்டனர். அப்படியானால் அதைப் பொலிஸார் நேரடியாக ஆலய நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்கப்பணிக்குமாறு ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் கோரிக்கை முன்வைத்தார். அதை ஏற்றுக்கொண்ட நீதிபதி, விக்கிரகங்களை ஆலய நிர்வாகத்திடம் மீள ஒப்படைக்குமாறும் அவற்றைத் தொல்லியல் சின்னங்களுக்கு சேதம் விளைவிக்காமல் மீளப் பிரதிஷ்டை செய்யவும் முடியும் எனவும் கட்டளையிட்டார்.

இதனையடுத்து இன்று காலை பொங்கல் வழிபாடுகளுடன் சிலைகள் மீள பிரதிஷ்டை செய்யப்படவுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

இதேவேளை - சிலைகளை உடைத்தவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கையை துரிதப்படுத்துமாறும் நெடுங்கேணி பொலிஸாரை நீதிபதி பணித்துள்ளார். அத்துடன் வழக்கு அடுத்த மாதம் 17ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (அ-ஒ,5,110)

### வசந்த...

இலங்கைக் கடற்படையின் தளபதியாக வசந்த கரன்னகொட பதவி வகித்த காலத்தில் இடம்பெற்றதாகச் சொல்லப்படும் மனித உரிமை மீறல்களில் கரன்னகொடவுக்குத் தொடர்புள்ளமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. வசந்தகரன்னகொட மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார் என்று அரச சார்பற்ற அமைப்புக்களும் சுயாதீன விசாரணையாளர்களும் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் நம்பகத்தன்மை வாய்ந்தவையாக இருக்கின்றன. இவற்றின் காரணமாகவே அமெரிக்காவுக்கான பயணத் தடைப் பட்டியலில் அவர் சேர்க்கப்பட்டுள்ளார் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (அ-ம)

### கரன்னகொடவுக்குத்...

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கடும் அதிருப்தி தெரிவித்துள்ளார். இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கிடம் அமெரிக்காவின் இந்த முடிவுக்குத் தனது வருத்தத்தையும் அதிருப்தியையும் அலி சப்ரி தெரிவித்தார் என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ-ம)

### 100 வயதான...

நபரான மூதாட்டி சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். பூரணம் (வயது -100) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். இதனால் நெடுந்தீவில் குறித்த சம்பவத்தில் கொலையுண்டவர்களின் எண்ணிக்கை 6 ஆக அதிகரித்துள்ளது.

அவரது இருதயம் செயலிழந்ததனால் உயிரிழந்தார் என்று மருத்துவ அறிக்கையிடப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை அதிகாலை ஒரே வீட்டில் வசிக்கும் 6 பேர் மீது நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதலில் 3 பெண்களும் 2 ஆண்களும் உயிரிழந்தனர். 100 வயதான மூதாட்டி படுகாயங்களுடன் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். அவரே நேற்று உயிரிழந்துள்ளார்.

இந்த கொலைவெறியாட்டத்தை அரங்கேற்றிவிட்டு நகைகளுடன் தப்பித்தவர் புங்குடுதீவில் வைத்து அன்றிரவே கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-125)

### சட்டவிரோத...

செய்யப்பட்டுள்ளனர் என கடற்படையினர் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தினரும் கடற்படையினரும் இணைந்து நடத்திய சோதனை நடவடிக்கையின்போது இந்தக் கைது இடம்பெற்றது. கொக்கிளாய் மற்றும் முல்லைத்தீவு தீர்த்தகரை பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களே கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் மீன்பிடிக்குப் பயன்படுத்திய மூன்று படகுகளும் கைப்பற்றப்பட்டன.

கைதான மீனவர்கள் சான்றுப் பொருள்களுடன் நேற்று வியாழக்கிழமை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களைத் தலா ஒரு இலட்சம் ரூபா பிணையில் விடுவிக்க நீதிமன்று உத்தரவிட்டது. (அ-ச-19)

### மாடுகளைக்...

பகுதி இளைஞர்கள் துணிகரமாக மடக்கிப்பிடித்த சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்ததாவது:-

எமது வாழ்வாதாரமாக இருக்கின்ற 20 வரையான மாடுகள் இதுவரை களவாடப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக மாடுகள் களவாடப்பட்டு இரவு நேரங்களில் மாங்குளத்திலிருந்து கடத்திச் செல்லப்படுகின்றன. பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியும் அவர்கள் நடவடிக்கை எடுக்கத் தயங்குகின்றனர். நேற்றுமுன்தினம் இரவு மாங்குளம், நீதிபுரம் பகுதியிலிருந்து மாடுகள் ஏற்றப்படுகின்றன அறிந்த ஊரவர்கள் பொலிஸாருக்கு அறிவித்தனர். ஆயினும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகை தரவில்லை. அதனைத் தொடர்ந்து அதிரடிப் படையினருக்கு அறிவித்தபோது அவர்கள் மாடுகள் ஏற்றப்படுகின்ற இடத்துக்கு வந்தனர். எனினும் எவரும் கைது செய்யப்படவில்லை. மாறாக வாகனங்களில் இருந்து மாடுகளை இறக்கிவிட்டு அந்த மாடுகளைக் கடத்திச்செல்ல வந்தவர்களைத் திருப்பியனுப்பினார்கள். இதையடுத்து இளைஞர்கள் பொறுமையிழந்து வீதியை மறித்து ஊடகங்களை அழைத்து மாடுகளை ஏற்ற வந்தவர்களைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். 15 மாடுகளும் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டன. இவ்வாறு கடத்தப்படும் ஒவ்வொரு மாடுகளும் எங்கள் வாழ்வாதாரம். எனவே விடயத்தின் தீவிரத்தன்மையை உணர்ந்து அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்தச் சட்ட விரோதச் செயல்களைத் தடுத்து நிறுத்தவேண்டும்- என்றனர். (அ-ம-ச-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலைபேசி திருட்டு சந்தேகநபர் கைது!

விளான் பகுதியில் பெறுமதி வாய்ந்த அலைபேசி திருடிய குற்றச்சாட்டுடன் தொடர்புடைய சந்தேகநபர் சண்டிலிப்பாய் பகுதியில் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார் என்று காங்கேசன்துறை குற்றத் தடுப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர். இளவாலை விளான் பகுதியில் உள்ள வீடொன்றில் பெறுமதி மிக்க அலைபேசி திருடப்பட்டுள்ளது என்று இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப் பட்டிருந்தது. அதற்கமைவாக முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் சந்தேகநபர் கைதானார். அவரிடம் மேற்கொண்ட விசாரணையில் வீட்டின் உரிமையாளர் அதிகாலை தோட்டத்துக்கு சென்ற நிலையில் வீட்டுக்குள் புகுந்து அலைபேசியைத் திருடி 5 ஆயிரம் ரூபா பணத்தொகைக்கு உறவினரிடம் விற்பனை செய்துள்ளார் என்பது தெரியவந்தது.

(ஓ-14-125)

## Room வாடகைக்கு

மருதனார்மடம் Training College இற்கு அருகாமையில் Room வாடகைக்கு உண்டு.
ஒருவருக்கு 3.000 ரூபா
(பெண்களுக்கு மட்டும்.)
தொடர்பு: 077 9574 580

## காணி விற்பனைக்கு

யாழ். நாவற்குழி A-09 வீதியில் இரண்டாம் காணி 08 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- ✓ இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ✓ குடியிருப்பு உள்ள சூழல்
- ✓ நன்னீரூற்று சூழல்
- ✓ 1 பரப்பின் விலை 650,000/= ரூபா மட்டும்.

076 4365 814, 077 0654 525

(CS 24646)A-1

## வேலையாள் தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள பிரபலமான விருந்தினர் விடுதி ஒன்றிற்கு AC Technician, Wiring மற்றும் Plumbing வேலை தெரிந்த மற்றும் முன் அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை.

உணவு மற்றும் போதிய சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
075 1859 296
077 7800 075

(CS 24638) A-1

## மணப்பெண் தேவை

01. மாவிட்டபுரம் - இணுவில், இந்து கௌரவகுலம் (V), 1985, சதயம், Civil Engineering, Charted Accountant, Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
02. மாவிட்டபுரம் - இணுவில், இந்து, கௌரவகுலம் (V), 1983, உத்தரம், MBBS Doctor, Australia Citizen, மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
03. நல்லூர் - வடமராட்சி, இந்து, கௌரவகுலம் (V), 1976, அச்சுவினி, MSc Network Engineer, Australia Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
04. உரும்பிராய் , இந்து, கௌரவகுலம் (V), 1974, திருவோணம், BSc in Human Biology, Accu Dip, Computer Account, Finance Advisor, Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண்தேவை.
05. நெல்லியடி, இந்து கௌரவகுலம் (V), 1978, கேட்டை, BSc IT Engineering (Canada University), Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
06. கோண்டாவில், இந்து, கௌரவகுலம் (V), 1979, அவிட்டம், BSc, MSc, Cost Engineer / Consultant, Canada Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
07. காரைநகர் - சுழிபுரம், இந்து, கௌரவகுலம் (V), 1980, சித்திரை, Bachelor of Software Engineering & Managment (Canada University), Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
08. மாதகல் - கோப்பாய், இந்து, கௌரவகுலம் (V), 1981, பூராடம், BSc Computer Science (UK), UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
09. காரைநகர், இந்து, கௌரவகுலம் (V), 1979, உத்தராடம், A/L, Business, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
10. காரைநகர், இந்து, கௌரவகுலம் (V), 1975, விசாகம், MSc Social Science, Running Own Business, UK Citizen. மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer
Whatsapp - 077 803 8193
Phone - 077 539 3728

## விற்பனைக்கு

நான்கு அடி சிங்கிள் இரும்புக் Gate விற்பனைக்குண்டு.
070 707 1799

## A/L இரசாயனவியல்

யாழ். நகரை அண்மித்த பகுதிகளில் தனிப்பட்ட அல்லது சிறு குழுக்களாக கற்பிக்கப்படும்.
தொடர்பு: 071 257 9018

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் மருதனார்மட வீதியில் இரண்டாவது ஒழுங்கையில் (சிவகுலவீதி) 29 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
இக்காணி 2 பரப்பாக பிரித்து தரப்படும்.

(CS49965)AH-1

077 366 8282

## காணி விற்பனைக்கு உண்டு

- * யாழ்ப்பாணம் புத்தூரில் 15 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- * பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- * மூன்று பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்.
- * நன்னீரூற்று
- * குடியிருப்பு சூழவுள்ள பகுதி

பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.
(முழுக்காணி களும் பிரதான காபற் வீதி முகப்புடனே உள்ளது).
(ஒரு பரப்புக் காணியின் விலை மூன்று இலட்சம் ( 300,000/= )



**தொடர்பு:**
077 4683 354
076 9119 371
076 7390 413

(CS 50092) A-1

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)

- ● யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர்ச்சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100 m தூரத்தில்
- ● 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ● குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- ● நன்னீரூற்று நிலம்
- ● பருத்தித்துறை வீதியிலிருந்து 1km தூரம்
- ● விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- ● சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்
- ● 1 பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும் (120,000/=)

பார்வையிடும் நேரம் : காலை 06.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை

தொடர்பு:- 076 755 8606 077 638 5683

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A-9 பிரதான வீதியுடன் 08 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ✓ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- ✓ திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ✓ ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்

பார்வையிடும் நேரம்:-
காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.

தொடர்புகளுக்கு: ஜெயம்
077 8147 389
077 9865 457

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 04 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- ✓ A-9 பிரதான வீதியில் இருந்து 700M தூரம்.
- ✓ காய்க்கும் தென்னைகள் 24 உள்ளன.
- ✓ 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✓ ஒரு பரப்பின் விலை 19 இலட்சம் முதல் 17 இலட்சம் வரை

பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.

தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு: ஜெயம்
077 8147 389
077 9865 457

(CS 24642)A-1

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கடந்த (29.03.2023) புதன்கிழமை இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் மாரிமுத்து குலசேகரம்

(ஓய்வுநிலை அதிபர்)



அவர்களின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் **இன்று (28.04.2023)** வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து **அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும்**, அதனைத் தொடர்ந்து நடைபெறும் **மதிய போசன நிகழ்விலும்** கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**
076 894 6477 (CS/50200)AH-1

இராசவீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.